**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.20/2020
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : சௌந்திரபாண்டி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2023.

27.02.2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர் இல்லை. எதிரிகள் 1 முதல் 3 சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். கடந்த 14.10.2019 ம் தேதி மகிண்டியில் உள்ள எனது உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டு வந்துகொண்டிருந்தேன். அப்போது மகிண்டி காலணியில் மலைச்சாமி என்ற நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் இருசக்கர வாகனத்தை நிறுத்தி விட்டு என்னவென்று பார்த்தேன். போலிசார் விசாரித்து எழுதிக்கொண்டிருந்தார்கள்.

2) போலிசார் என்ன எழுதினார்கள் என்று எனக்குத் தெரியாது. அதில் என்னிடமும், இருளாண்டியிடமும் கையொப்பம் கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதற்காக கையொப்பம் செய்தேன் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அசா.1 பாண்டியம்மாள் எனது அக்கா ஆவார். நானும், அசா.1ம் ஒரே ஊர்தான். மகிண்டி காலணியில் வைத்து கையொப்பம் செய்தோம். எங்கள் ஊருக்கும் மகிண்டிக்கும் 5 கி.மீ. தூரம் இருக்கும். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

Case No.CC.20/2020
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : இருளாண்டி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2023.

<u>27.02.2023</u>

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர் இல்லை. எதிரிகள் 1 முதல் 3 சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை. நானும் அசா.4 எனது மச்சானும் மகிண்டியில் உள்ள எனது உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டு வந்துகொண்டிருந்தோம். அப்போது மகிண்டி காலனியில் மலைச்சாமி என்ற நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள்.

2) போலிசார் என்ன எழுதினார்கள் என்று எனக்குத் தெரியாது. அதில் என்னிடமும், அசா.4 யிடமும் கையொப்பம் கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதற்காக கையொப்பம் செய்தேன் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) அசா.1 பாண்டியம்மாள் எனது தம்பியின் மனைவி ஆவார். மகிண்டி காலனியில்

வைத்து கையொப்பம் செய்தோம். எங்கள் ஊருக்கும் மகிண்டிக்கும் 5 கி.மீ. தூரம் இருக்கும். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அசா.1 எனது தம்பியின் மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.